RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s1836

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# அடித்தள மக்கள் ஆய்வு நோக்கில் அழகிய பெரியவனின் தகப்பன் கொடி நாவல்

**இரா. இராஜேஸ்வரி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம்,மதுரை-625008, தமிழ்நாடு, இந்தியா.

# Study about Oppressed People in Thagapan Kodi, a Novel by Azhagiya Periyavan

**R. Rajeswari [a, *]**

[a] Department of Tamil, Government. Arts and Science College, Thirumangalam, Madurai-625008, Tamil Nadu, India

* Corresponding Author: rajeswarimeenal@gmail.com

Received: 18-09-2022
Revised: 20-10-2022
Accepted: 12-11-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

Human society has undergone various progression and thus developed into a civilized society. The main reason for oppression in Indian society is caste. Castes were formed and rigidified on the basis of occupational differentiation. Due to the upper and lower caste system, people were treated with disgrace, impurity and untouchability and certain ethnic groups were excluded from society. The lower caste people lived with such cruelties throughout their life. Thus, they were called oppressed people. No changes took place in the life of those people and the reason behind it is they are ideologically oppressed. The oppressed people began to think about their lives only when education is offered for all people. Through education they realized that they were enslaved. Thus, the oppressed people's survey reveals the objections of the oppressed people. Such objections lead to protests. In that way Dalit literature become very famous. In the novel Thagappan Kodi, the sentiments of resistance against the dominant class are gradually formed and the thought of liberation is developed through renouncing various symbolic activities that disparage themselves. This article exemplifies the sufferings of the oppressed people, their moaning and the plans laid out by upper caste to torture them.

**Keywords:** Base People, Filth, Rebellious Spirit, Antipathy, Caste Discrimination

## முன்னுரை

சமூகமாக மக்கள் வாழத் தொடங்கிய காலத்திலிருந்து வேறுபாடுகளும் இருந்து வருகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மனிதர்களுக்குள் ஏழை, பணக்காரன் என்னும் வேறுபாட்டினை ஏற்படுத்தின. இதனைச் சங்க காலத்தில் உழுவித்துண்போர், உழுதுண்போர் என்னும் பாகுபாடாகக் காணமுடிகிறது. அதன்பின்னர். தொழில்கள் சார்ந்து மக்களிடையே பிரிவினைகள் தோன்றின. அவை சாதிய அடிப்படையாக மாற்றம் பெற்றன. சாதியத்தின் தோற்றம் குறித்துக் கூறும் அறிஞர்கள் பலரும் அதனை வர்ணப்பாகுபாட்டின் தொடர்ச்சியாகக் காண்கின்றனர். வர்ணம் என்பது மக்களைப் பாகுபடுத்தும் எண்ணக்கருவாகும். தொழில்கள் சார்ந்து மனிதர்கள் வேறுபாடுகளை உணராத நிலையில் அத்தொழில்கள் சார்ந்தே பிரிவினைகளைத் தோற்றுவித்து அதனைச் சமுதாயத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாற்றியவர்கள் பார்ப்பனர்கள் ஆவர். பிற்காலச் சோழர்கள் காலத்தில் சாதியம் இறுகிப் போன ஒன்றாக மக்களிடையே வேரூன்றியது எனக் கருதப்படுகிறது. தொழில் சார்ந்து தீட்டு, புனிதம்

கற்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியை இன்றும் சமூகத்தில் காணமுடிகிறது. சங்ககாலத்தியச் சூழலிலும் மேல், கீழ் வர்ணங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இழிசினர், புலையர் போன்ற சொற்களாலும் மக்கள் சுட்டப்பட்டுள்ளனர். பார்ப்பனியத்தினால் மக்களிடம் இருந்த பாகுபாடு ஏற்றத்தாழ்வுக்குரியதாக மாறியது என்பதே அறிஞர்களின் கருத்தாக அமைகிறது. ஏழை, பணக்காரன் என்னும் எதிர்வைப் போல பண்ணையார், அடிமை என்னும் உறவிலான மக்கள் பிரிவு நிலவுடைமைச் சமூகத்தில் தோற்றம்பெற்றது. நிலத்தில் உழைப்பதற்காக மக்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோர் உடைமையாளர்கள் ஆவர். இவர்கள் தம்மிடம் பணி செய்வோரை விற்கவும் செய்தனர். வாழ்வில் ஏற்றம் காணாத மக்களாக அடிமை வாழ்வினை வாழ்ந்தவர்கள் இந்தியச் சுதந்திரத்திற்குப் பின்னரும் இருந்து வருகின்றனர். இம்மக்கள் தம் அடிமைத் தனத்தை உணர்ந்து கொள்ளும் கல்வியறிவற்றவர்களாக இருக்கின்றனர். எனவே அவர்கள் கல்வி கற்பது முதலில் இன்றியமையாதது எனக் கருதிய பிற்கால அரசியல் சூழல் அனைவருக்கும் கல்வியைக் கட்டாயமாக்கியது. ஆயினும் தம் வாழ்வைப் பற்றிய உணர்வே இல்லாத மக்கள் வாழ்ந்து கொண்டுதான் இ

ருக்கின்றனர். மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டுஅவர்களைக் கட்டுப்படுத்தும் சிந்தனையை உயர்சாதியினர் கடைபிடிக்கின்றனர். காலங்காலமாக ஒடுக்கப்படும் மக்கள் விழிப்புணர்வை அடையும் வகையில் சமூக மாற்றங்கள் நிகழ்கின்றன. அதில் நவீனத்துவம் கொண்டு வந்த கல்வி மற்றும் பண்பாட்டு மாற்றங்களால் ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்கள் கல்வி கற்றுத் தேறி தாம் அடிப்பட்டு வாழும் நிலையை உணர்ந்தனர். அவர்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஏனைய மக்களின் வாழ்வினைக் குறித்து சிந்தித்தனர். அவ்வாறான சிந்தனைகள் அடித்தள மக்கள் கருத்தியலை உருவாக்கின. தமிழில் தோன்றிய நவீன இலக்கியங்களில் தலித் இலக்கியம் என்னும் வகைமை 1980களுக்குப் பின்னால் தலித் மக்களின் வாழ்வியலை அதன் நீர்மை குன்றாமல் வெளிப்படுத்தினவாகும். தலித் மக்களின் போராட்டங்களையும் வாழ்வியல் நுட்பங்களையும் வெளிப்படுத்தியன் மூலம் கலை இலக்கியங்களில் கோலோச்சி வந்த உயர் வர்க்கத்தினரின் ஆதிக்கம் நிலை குலையத் தொடங்கியது. அடித்தள மக்கள் தம் வாழ்வினைப் பற்றிய உணர்வினைப் பெற்று போராட்ட வாழ்வினை மேற்கொள்வதற்கு ஏதுவாகக் கருத்தியல்கள் வடிவமைந்தன. அக்கருத்தியலின் அடிப்படையில் கலை இலக்கியங்களை அணுகும் போக்கும்உருவானது. அடித்தள மக்கள் கருத்தியல் என்பது தலித்தியம் போன்ற ஒரு கருத்தியலே ஆகும். தலித்தியத்தின் கூறுகளைக் கொண்டுள்ள இக்கருத்தியல் அடித்தட்டு மக்களின் அடிமைத் தனத்தைத் தோலுரித்துக் காட்டுவனவாகும். ஆதிக்கத்திற்கு எதிரான சிறு முனகல் கூட காலப்போக்கில் பெரும்போராட்டத்திற்கு அடிப்படையாக அமையும் என்று கூறின. அந்தவகையில் அழகிய பெரியவனின் தகப்பன் கொடி என்னும் நாவலினை அடித்தள மக்கள் கருத்தியல் நோக்கில் இக்கட்டுரை அணுகுகிறது.

## அடித்தள மக்கள்

சமூக வாழ்வில் அனைத்துத் தளங்களிலும் பின்தங்கியிருப்போரே அடித்தளமக்கள் ஆவர். “விளிம்பு நிலை மக்கள் அல்லது அடித்தள மக்கள் எனக் கூடிய சமூக பொருளாதார நிலையில் பின்னுக்குத் தள்ளப்பட்ட மக்கள்” என்று (Bakvatchala Bharathi, 2003) “பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்படும் ஆண், பெண் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு உட்படும் தலித்துகள், பாலியல் ஒடுக்குமுறைக்கு உட்படும் பெண்கள் ஆகிய அடித்தள மக்கள்” என அடித்தள மக்கள் பற்றிக் குறிப்பிடுகின்றனர் (Muthaiya, 2010). சாதியாலும், பொருளாதாரத்தாலும் பின்தங்கிய இம்மக்கள் மேட்டிமையோர் என்னும் சிறுகுழுக்களால் ஆளப்படுபவர்கள் ஆவர். அடித்தள மக்கள் எண்ணிக்கையில் மிகுதியாக இருக்கின்றனர். “மேட்டிமைக் குழுவிற்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும், சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெற முடியாதவர்களாகவும் குறைந்த அளவு உணவு, குறைந்த அளவு உடை, குறைந்த கல்வி பெற்று வாழும் மக்கள் பிரிவினரே அடித்தள மக்கள் எனப்படுகின்றனர். இந்தியச் சூழலில் அடித்தள மக்கள் என்பதற்குச் சாதி, செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதாரநிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலைகளிலும் தாழ்ந்திருக்கும் மக்கள் என ஓர் எளியவரையறை செய்யலாம்” என்ற

கூற்றின் மூலம் அடித்தள மக்கள் வரையறையினை அறிந்துகொள்ளலாம் (Sivasubramanian, 2015). இந்தியாவில் சாதியால் தாழ்த்தப்பட்ட மக்களே மிகுதியாக உள்ளனர். செய்யும் தொழில் சார்ந்த இப்பிரிவினையே தீட்டு, தீண்டாமைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

## அடித்தள மக்கள் கருத்தியல்

மக்கள் சமூகங்கள் எப்போதும் ஒரே மாதிரி நிலைத்திருப்பதில்லை. அடித்தட்டு மக்களின் வாழ்வியல் படிப்படியாக நவீன சமூகத்தில் மாற்றம் பெறத் தொடங்கியது. அது சார்ந்த கருத்தியல்களும் உருவாகத் தொடங்கின. நவீனத்துவக் கோட்பாடுகளில் ஒன்றாக அடித்தள மக்கள் கருத்தியல் தோற்றம் பெற்றது. பின்நவீனத்து வசிந்தனைகளில் ஒன்றாகத் தலித்தியம், பெண்ணியம், விளிம்புநிலை ஆய்வுகள் தோன்றின. அவற்றின் பிறிதொரு பரிமாணமே அடித்தளமக்கள் கருத்தியல்ஆகும். ரணஜித்குகா போன்ற சிந்தனையாளர்கள் அடித்தள மக்கள் சார்ந்த கோட்பாடுகளை உருாக்கியவர்கள்ஆவர். "அடித்தள மக்கள் ஆய்வுகள் சட்டத்தின் வன்முறைகளைச் சுட்டிக்காட்டுவதோடு சட்டத்ததால் வன்முறையாக வரையறுக்கப்படும் நிகழ்வுகளின் விதிகளை (சட்டங்களை) அடையாளம் காட்டுவதாகவும் அமைய வேண்டும்.... அரசுக்கு எதிரான அடித்தள மக்களின் கலகங்களை அரசியல் நீக்கம் செய்து வெறும் குற்றச் செயல்களாக வரையறுக்கும். சட்டம்/ நீதி வழக்குச் சொல்லாடல்கள் அடித்தளமக்களுக்கு இடையேயான இத்தகைய ஒருங்கிணைவைச் சட்ட விரோத மாகக் கட்டமைக்கின்றன" என்ற கூற்றில் அடித்தள மக்களின் வாழ்வியலைப் பற்றியும் அவர் தம் துயரங்களிலிருந்து விடுபடுவதற்கு சட்டங்கள் துணையின்றி இருப்பது பற்றியும் கூறப்படுகிறது (Marx, Velsamy, 2012). ரணஜித்குகாவின் ஆய்வுகள் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்குடி மக்களுக்குத் தம்மைத் தியாகம் செய்யும் சொல்லாடல்களை உற்பத்தி செய்வதன் மூலம் அவர்களை என்றைக்கும் அடிமைகளாக வைத்திருக்கும் வகையில் கருத்தியலை உருவாக்கினர் என்கின்றன. "காலனிய இந்தியக் குடியானவர்கள் தங்களை ஆண்ட சர்க்காரி, சகுகாரி, சமீந்தாரிகளுக்கு அடிபணிந்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டசாதியினர். உயர்சாதி எசமானர்களுக்காக உயிர்த்தியாகம் செய்வது பற்றியக் கதைப்பாடல்கள் பல உள்ளன. கூர்க் நாட்டுப்புறக்கதை ஒன்றில் செத்துப் போன எசமான் சிதை மீது தாழ்ந்த சாதி அடிமை ஒருவன் விழுந்து உடன்கட்டை ஏறிய தகவல் வந்துள்ளது. இவனுக்குப் பிறகு மூதாதையர் வழிபாட்டுத் தெய்வம் என்ற தகுதி தரப்பட்டது." என்ற கூற்றின் மூலம் ரணஜித் குகா தாழ்த்தப்பட்ட மக்கள் தம் வாழ்வை எசமானர்களுக்கு அர்ப்பணிக்கப் பிறந்தவர்கள் என்ற கருத்தினை விதைத்துள்ளனர் (Rajgowthaman, 2012). இதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் கருத்தாக்கத்தையே கலகமனதின் அடிப்படைக் கூறுகள் என்று கூறுகிறார். "அப்படிப்பட்ட வர்க்க ஓர்மையின் தொடக்கம் என்று இதனைக் கொள்ளலாம். இந்நிலையை எதிர்மறையான எதிர்த்துப் பேசுகின்ற மனப்பான்மை என்று கிராம்சி குறிப்பிடுவார். வரலாற்றுக் காலம் நெடுகவும் ஒடுக்கப்பட்டு வந்த கீழ்வர்க்கங்கள் தொடர்ந்து எதிர்மறைச் செயல்கள் ஊடாகத்தான் சொந்த விழிப்புணர்வைச் சாதிக்க முடியும் என்பார் கிராம்சி." என்ற குறிப்பில் வர்க்க ஓர்மை அல்லது அடித்தட்டு மக்களின் எழுச்சி என்பது எதிர்மறைச் செயல்பாடுகளால் உருவாகக் கூடியவை என்பது புலப்படுகிறது (Rajgowthaman, 2012). ரணஜித்குகாவின் அடித்தளமக்கள் கருத்தியலில் தலைகீழாக்குதல் என்பதும் ஒன்று. தாழ்த்தப்பட்ட மக்கள் தம்மை தாழ்த்திக் கொள்ளும் சொற்களையே பேசவேண்டும். மௌனத்தைக் கடைபிடித்தல் வேண்டும் என்பன போன்றவற்றிற்கு மாறான பேச்சு வன்முறையாக வெளிப்படுதலும், தலைகீழாக்குதலில் ஆதிக்கச் சாதியினரின் சொத்தை அழித்தலும் ஆன செயல்பாடுகள் ஆதிக்கத்திற்கு எதிரான குடியானவனின் செயல்கள் என்கிறார் ரணஜித்குகா "கிளர்ச்சியின் போது தங்களால் வேறு ஏதும் செய்ய முடியாத நிலையில் குடியானவர்கள் சமீன்தாரி, சகுகாரி, சர்க்காரிகளிடமிருந்த ஒப்பந்தப் பத்திரங்கள், கோப்புகள், கச்சேரி, கொடி அரசு அலுவலகங்கள் ஆகியவற்றை எரித்தார்கள்" என்று கூறப்படுகிறது (Rajgowthaman, 2012). இவ்வாறு அடித்தள மக்கள் தங்கள் எதிர்ப்பினைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவர் எனப்படுகிறது. "மௌனம் என்பது ஆதிக்கத்திற்கு ஆட்பட்ட நிலையின் அடையாளமாகும். தென்னிந்தியாவில் பண்ணையாட்கள் தம் ஆண்டைகளிடமிருந்து உத்திரவுகளைப் பெறுகிற போது கையால் தம்முடைய வாயைப் பொத்துவது பண்ணையாட்கள் மீது ஆண்டைகளுக்குள்ள அதிகாரத்தை அங்க அசைவின் மூலமாக மொழி கடந்த விதமாக அங்கீகரிக்கும் செயலாகும். ஆண்டையின்

சொல்லுக்குச் சொல் பதில் கூறுவது ஆட்களின் அதிகப்பிரசங்கித்தனமாகக் கண்டிக்கப்படும்” என்று குறிப்பிடுகிறார் (Ranajit Guha, Susi, Tejaswini Niranjana, 2016). மௌனத்தைக் கலைத்தல், எதிர்ச் செயல்பாடு ஆகியன தலித் மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான செயல்பாடுகளாக அமைகின்றன என்பதைக் கூறுவதாக அமைகிறது.

## அழகிய பெரியவனின் தகப்பன் கொடி

தமிழ் எழுத்தாளர்களில் தலித் இலக்கியம் வகைமையாக வெளிப்பட்டு வளர்ந்து கொண்டிருந்த போது எழுத்துலகில் அறியப்பட்டவர் அழகியபெரியவன் ஆவார். இவரது இயற்பெயர் அரவிந்தன் என்பதாகும். இவர் வேலூர், பேரணாம்பட்டு பகுதியைச் சேர்ந்தவர் ஆவர். இவருடைய தாய்மாமா மரபுக் கவிஞராக இருந்தவர். அவர் தான் படித்த குறிஞ்சி மலர் நாவலில் தாக்கம்கொண்டு அரவிந்தன் என்ற பெயரை வைத்தார் என்று கூறப்படுகிறது. தகப்பன் கொடி என்னும் நாவலுக்குச் சிறந்த இளம்படைப்பாளர் விருதினை இந்தியாடுடே இதழ் வழங்கியது. தமிழக அரசின் விருதையும் இந்த நாவலுக்காக பெற்றார். இவருடைய கதைகள் தலித் மக்களின் வலியையும் உள் முரண்களையும் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் விரிவாகப் பேசுவனவாக அமைகின்றன. தகப்பன்கொடி நாவலில் அதிகாரத்திற்கு எதிராக அடித்தட்டு மக்களின் போராட்டம் பேசுபொருளாக அமைகிறது. மேல்சாதிக்காரர்களால் பறிக்கப்பட்ட பஞ்சமி நிலத்தைக் கைப்பற்றிச் சொந்தமாக்குவதும் தாழ்த்தப்பட்ட மக்களை வதைக்கும் பண்ணையார்களை எதிர்த்துக் கேள்வி கேட்பதும் என நாவல் அமைகிறது.

## அதிகாரத்திற்கு எதிராகக்குரல் கொடுத்தல்

தகப்பன்கொடி நாவலில் அம்மாசி முதன்மைப் பாத்திரமாக நாவல் முழுவதும் வருகிறார். தன்மனைவி, குழந்தைகளுடன் வாழ்பவர். அவரது நிலம் ஆதிக்கவாதிகளால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் சூழலில் அவர்களை எதிர்க்கும் மனநிலையைப் பெறுகிறார். அதற்கு அடிப்படையாகக் கல்வி அமைகிறது. அம்மாசி தன் வேறு பகுதிகளில் குடியிருந்து விட்டு சொந்த ஊரான தாய், தந்தை பிறந்த ஊருக்கு வருகிறான். ஊர்த் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மயில்பட்டித் திருவிழாவில் குளம் வெட்டி சுற்றுச் சுவர் எடுத்திருந்தார்கள். அங்கு பொங்கல் வைத்துக் கொண்டிருந்தார்கள். காற்று சூறைக்காற்றாக வீசி மேல்சாதிக்கார பெண்களின் ஆடைகள் விலக நேர்ந்தது. அதைக் கண்டு அடித்தட்டு மக்கள் சிரித்தனர். இதற்காக ஊரார் கூடி அம்மக்களை ஊரைவிட்டுத் தள்ளி வைத்தனர். “மயில்பட்டியில் ஏழு ஊர்பஞ்சாயத்து கூடியிருந்தது. நம்ம பொம்மனாட்டிகளோட மானத்தப் பார்த்ததினாலும் அதக்கண்டு ஓடி மறையாம சிரிச்சதினாலும் திருநா முடியற வரைக்கும் பறக்குடி களத்தள்ளி வெக்கிறோம்” என்பது தாழ்த்தப்பட்ட மக்கள் மௌனத்தைக் கலைத்தல் என்னும் செயல்பாட்டின் வடிவமாகக் கொள்ளப்படத் தக்கதாகும். தலை கீழாக்குதல் என்னும் செயல்பாட்டின் வடிவமாகவும் கொள்ளலாம் (Alagiyal Periyavan, 2010). நிலத்தை இழந்த கதையைப் பற்றி அம்மாசி அறிகிறான். “சின்னையன் அப்பனும் எங்கப்பனும் சினேகிதக் காரனுங்களாச்சே. ரொம்ப ஒத்துமையாம். என்னா தாத்து மாத்துப் பண்ணானோ எங்க ஐயங்கிட்டேயிருந்து புடுங்கீனுக்கீறான். கேட்டதுக்கு சோத்தப் போட்டேன். துட்டக் குடுத்தேன்னு திரும்பிக்கினானாம். உள்ளதும் போச்சுடா தொள்ளக் கண்ணான்னு நம்பின. கைல ஓட்டக் குடுத்துட்டுப் போனான் கம்மினேட்டி. அம்மாசி இப்படிப் பல கதைகளைப் பெரிய தலைகளிடமிருந்து கேட்டதுண்டு. “களிக்கும் கூழுக்கும் பறக்குடிகள் தங்கள் ஆண்டைகளிடம் நிலங்களை இழந்த கதைகள் அவை.” (அழகிய பெரியவன், 2010) என்று அடித்தட்டு மக்கள் தம் நிலங்களை இழந்த கதை கூறப்படுகிறது. இவற்றை மீட்கும் போராட்டத்தினை முன்னெடுக்கும் போதுதான் அவர்கள் பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள். நிலம் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் அம்மாசியிடம் அதற்கானத் தீர்வைகட்டவில்லை என்றால் நிலத்தை உழ முடியாது என்று கூறிச் செல்கின்றனர். அம்மாசியும் அதற்கு தலையசைக்கிறான். அம்மாசியின் தந்தை சொந்தமாக நிலத்தில் ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்று கூறுகிறார். திருமலய்யன் சொந்தமான நிலத்தில் அடிமை வேலை பார்த்தே அம்மாசி காலம் கழிக்கிறான். நிலத்தில் கண்டெடுத்த புதையலை அம்மாசி திருமலய்யனிடம் கொடுக்க அதை வாங்கிக் கொண்டு அம்மாசியை ஏமாற்றுகிறான். “இத்தெ

ஆண்டைக்கிட்ட குடுத்துப்புட்டு துட்டா வாங்கிக்கயா இது நமுக்குச் செரிப்படாது. அது அதுக்குன்னு ஒரு பவிசு இருக்கது. எந்த மகராசியோ, ஆண்டவன் நமுக்குன்னு தண்ணீல அனுப்பி வெச்சிருக்கிறான். ஒரு ஊட்டக்கட்டினு அந்தக் காணில கெணறு தோண்டி உழுது பொழச்சிக்கலாம்." (அழகியபெரியவன், 2010) என்று அவனது மனைவி அபரஞ்சி சொல்ல அவனும் திருமலய்யனிடம் கொண்டு போய் புதையலைக் கொடுக்கிறான். அவன் அதை வாங்கிக் கொண்டு அதை மதிப்புப் போடனும் என்று கூறி அனுப்பி விடுகிறான். பின்னர் "அம்மாசி நீயி குடுத்த நகைங்க மெருகு பூசுனதுதான்டா அசல் பொன்னில்லே நம்மூரு சம்முகனாசாரிகிட்டதாண்டா குடுத்துக் கேட்டேன். ஒன்னத்துக்கும் ஒதவாதாண்டா" என்று கூறி ஏமாற்றி விடுகிறான் (Alagiyal Periyavan, 2010).

இவ்வாறு ஆண்டைகளிடம் ஏமாற்றப்படும் அறியாமை கொண்டவர்களாக அடித்தட்டு மக்கள் இருப்பதை நாவல் சித்தரிக்கிறது. இதிலிருந்து அவர்கள் விழிப்புணர்வினைப் பெற்று அதிகாரம் செய்வோரை எதிர்க்கும் நிலையையும் நாவல் கூறுகிறது. செருப்பு போட்டு திருமலய்யன் முன்னால் வந்ததற்காக பொன்னு வைத்தியன் சாகடிக்கப்படுகிறான். இதைக் கண்டு அம்மாசி அச்சம் கொண்டாலும், தான் உழைத்துக் கொண்டிருப்பதற்குக் கூலியை உயர்த்திக் கேட்கும் மன உறுதியை ஏற்படுத்திக் கொள்கிறான். "ஆண்டையிடம் கூலி உயர்த்திக் கேட்டுப் பார்க்கலாம். இத்தனை காலமாய் ஊழியம் செய்கிறது. அதே அரைபுட்டி நெல்லும் கூழும் களியும்தான். அதுவும் குடியாத்தம் பக்கமெல்லாம் நாலு சேர்மரக்கால்தான்." என்று எண்ணுகின்றான் (Alagiyal Periyavan, 2010). அதே போல் ஆண்டையிடம் தனக்கு கூலியை உயர்த்தித் தரும்படி கேட்கிறான். திருமலய்யன். தன் நிலத்தை விட்டுச் சென்று விடும்படிக் கூறுகிறான். அவன் நிலத்தையும் எடுத்துக் கொண்டு அங்கிருந்து அவனை வெளியேற்றினார்கள். வேற்றூரில் பொன்னனுடன் தாமுத்தன் ஆண்டை வீட்டிற்கு வேலைக்குப் போகிறான் அம்மாசி. அங்கு கழிவு நீர்த்தொட்டியைச் சுத்தம் செய்ய சொல்கிறான் தாமுத்தன். அதற்கு அம்மாசி தன்னால் அந்த வேலையெல்லாம் செய்ய முடியாது என்று கூறுகின்றான். தாமுத்தன் அம்மாசியை வசைபாடிக் கொண்டே தாக்குவதற்கு வருகிறான். ஆயினும் எதற்கும் அச்சப்படாமல் நின்றான் அம்மாசி. அடிக்க அருகில் வந்தால் அடித்து விட்டு ஓடி விட வேண்டும் என மனதில் திட்டமிட்டுக் கொண்டே இருந்தான். "இன்று ஏதாவது பேசினால் அடித்து விட்டு ஓடிவிடலாம் என்று மனதில் திட்டம் போட்டுக் கொண்டு நின்றான் அம்மாசி" (அழகியபெரியவன், 2010) என்று அதிகாரத்திற்கு எதிரான எதிர்ப்புப் படிப்படியாக அம்மாசியிடம் மேலெழுந்து வருவது கூறப்படுகிறது. பின்னர் அவன் தோல் தொழிற்சாலையில் சேர்ந்து பணி செய்கிறான்.

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை மதுகுடித்ததாகப் பிடித்துக் கொண்டு போவது வழக்கமாக இருந்தது. ஆண்களை நிறுத்தி சோதனை செய்து கொண்டே வந்தவர்கள் முத்துமாரியைப் பிடித்தார்கள். அவன்தான் சாராயம் காய்ச்சுவான். அவனோடு சேர்ந்து சுப்பன் காவலரிடம் பிடிபட்டு அடிக்கப்படுகிறான். அவன் பேச்சு மூச்சில்லாமல் ஆனதைக் கண்டு முருகன் தன் இனத்தைச் சார்ந்தவனைக் காவல்துறையினர் அடித்துப் போட்டதைப் பற்றி சத்தமிடுகிறான். ஊரில் இருந்தவர்கள் அனைவரும் கூடி வரவும் காவல்துறையினர் காவல் ஆய்வாளரை அழைத்து வருகின்றனர். அவர் முன்னால் முருகன் "நாந்தான் சாரு என்னான்ற இப்ப. எங்காளு ஒருத்தன பேச்சுமூச்சில்லாம அடிச்சுப் போடடுக்கீறது மட்லியும் நாயமா ஆம்புளிங்க குடிச்சா அவனுங்கள மட்லியும் புடி என்னாத்துக்குப் பொம்பளிங்ககிட்ட போறநானு இந்த ஊருக்குக் கோல்காரன். எங்க சுப்பனுக்கு மட்டிலியும் எதானா ஒன்னு ஆச்சி வேலூருக்கு பெரியதிகாரி வெரைக்கும் போவென் நானு" என்கிறான் (Alagiyal Periyavan, 2010). அவனது பேச்சினால் அதிர்ந்த காவலர்கள். சுப்பனைத் தாம் காப்பாற்றுவதாகக் கூறி தூக்கிச் செல்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களின் விழிப்புணர்வினை இது காட்டுகிறது. இது போல் பறைக்குடியினர் பெண் வீட்டிற்குள் நுழைந்த ஆண்டை ஒருவனைப் பிடித்து அடிக்கிறார்கள். சாயபுவான அவனை வெளியே இழுத்து வந்து "உங்கிட்ட எஜமான் எஜிமான்னு வேலைக்கு வந்த கைகட்டி நிக்கிறமின்ற எளக்காறந்தான" என்று கேட்டு மீண்டும் அவனை அடிக்கிறார்கள். பின்னர் கழுதயை ஒன்றை பிடித்து வந்து அதன் மேல் ஏற்றி கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அவமானப்படுத்தி அனுப்புகிறார்கள்.

பறைக்குடிகளிடம் ஏற்பட்ட விழிப்புணர்வுகள் அதிகார வர்க்கத்தினரை ஆட்டம் காண வைப்பதாக இருந்தது. தம் இழிவுக்குக் காரணமான அடையாளச் செயல்பாடுகளைக் கைவிட வேண்டும்

என்ற நிலைக்கும் வருகிறார்கள் "பக்கத்துலயேகீற பெரியபட்டியில மோளம் அடிக்கக்கூடாது பொணந்தூக்கக் கூடாது. குழி வெட்டக் கூடாதுன்னு எப்பவோ தீர்மானமாயிட்டுகீது உன்னுமே நாம இப்படி இருந்தா எப்பிடி எவனும் இனிமே ஆத்துக் குடிக்காரங்களைப் பாத்து நம்மூரதாண்டி போறவரீக்கும் எழுந்து நிக்கிறதோ செருப்பு போடாமெ போறதோ கூடாது. உன்னுமே அவனுங்கள என்னாத்துக்கு நாடினுகீறது. மலை ஏரலாம். பீடி சுத்தலாம். சாப்பு வேலைக்குப் போலாம். அவனுங்க வேலதரலன்னா மயிராச்சி" என்று ஆதிக்கச் சாதியினருக்கு இனிமேல் அடிபணிவது இல்லை என்றும் ஊர்வழக்கங்களை மீறுவது என்றும் தீர்மானிக்கின்றனர் (Alagiyal Periyavan, 2010).

இதே நிலையில் போராட்டங்கள் நடத்தி பஞ்சமி நிலங்களை மீட்கின்றனர் என நாவல் பேசுகிறது. அடித்தட்டு மக்களின் வாழ்வியலில் அடிமைத்தனம் இருந்தது. அதைத் தொடரக்கூடாது என்பதை உரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

## முடிவுரை

பண்பாடு, நாகரிகம் பெருகிய நிலையிலும் மக்கள் ஒடுக்கப்படுவதும், கீழ்மையாக நடத்தப்படுவதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அடித்தள மக்கள் எனப்பட்டோர் காலங்காலமாக அடிமைகளாக வாழ கருத்தியல் ரீதியாகவே பழக்கப்படுத்தப்பட்டவர்கள் ஆவர். அவர்களது எஜமானர்களுக்குத் தங்களை அர்ப்பணிக்கும் எண்ணமுடையவர்களாக வார்க்கப்பட்டவர்கள். அவர்களிடமிருந்து உருவாகும் ஒவ்வொரு எதிர்ப்பு உணர்வும் படிப்படியாக வளர்ந்து போராட்டமாக உருவெடுக்கும் என்பதனை அடித்தள மக்கள் கருத்தியல் சுட்டுகின்றது. 1980களுக்குப் பிந்தைய சூழலில் தலித் இலக்கியம் உருவாக்கம் பெற்றது. அதன் ஒரு பரிமாணமே அடித்தள மக்கள் இலக்கியம் ஆகும். தலித்துகள் தங்கள் வாழ்வினை ஆதிக்கச் சாதியினரைச் சார்ந்தே அமைத்துக் கொண்டிருந்த நிலைமை படிப்படியாக மாற்றம் பெற்றதையே தகப்பன்கொடி நாவல் சுட்டுகிறது. எதிர்ப்புக் குரல்கள் தொடக்கத்தில் அமுக்கப்படுவதும் பின்னர் வீறு பெறுவதும் நாவலில் கூறப்படுகிறது. அடிமைத் தளையில் உழன்றவர்கள் கல்வி போன்றவற்றால் விழிப்புணர்வை அடைவதும் முற்போக்கு சிந்தனைகளால் ஈர்க்கப்படுவதும் அவர்களது விடுதலையை சாத்தியப்படுத்துகின்றன. தகப்பன்கொடி நாவலில் எதிர்ப்புணர்வுகள் உருவாகும் தன்மை காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது.

## References

Alagiyal Periyavan, (2010) Thagappankodi, Aali Pathippagam, Chennai, India.

Bakvatchala Bharathi, (2003) Vallinam, Magazine, Puducherry, India.

Marx. A., Velsamy, P. (2010) Viliampunilai aaivugalum tamilk kadahaipadalgalum, Pulam Veeliyeedu, Chennai, India.

Muthaiya, E. (2010) Adithala makkal thodarpana panpattu solladalkal, New Century book House, Chennai, India.

Rajgowthaman, (2012) Dalithiya Vimarsana Katturaigal, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Ranajit Guha, Susi, T., Tejaswini Niranjana, (2016) Viliampu Nilai makkalin Porattangal, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Sivasubramanian, A. (2016) Adithala makkal Varalaru, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License